செ.வெ.எண்.340 நாள்.19.04.2010

செய்தி வெளியீடு–19.4.2010

## பல்லாவரத்திலுள்ள "மறைமலையடிகளார் நினைவு இல்லம்" 15 இலட்சம் ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்படும்!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப்போற்றப்படும் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் அவர்கள் வாழ்ந்து மறைந்த அவரது இல்லம் காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரத்தில் அமைந்துள்ளது. அந்த இல்லம் மறைமலையடிகளார் நினைவு இல்லமாகத் தற்போது தென்னிந்தியத் தமிழ்ச்சங்கத்தின் பொறுப்பில் உள்ளது. இக்கட்டடம் 1914ஆம் ஆண்டில் கட்டப்பட்டது என்றும்; பல ஆண்டுகளாகவே பயன்படுத்தப்படாமல் இருப்பதால் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, மறைமலையடிகளார் நினைவு இல்லத்தைப் பழுதுபார்ப்பதற்காகத் தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம் என்ற நிறுவனத்திற்கு 15 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கிடவும், அத்தொகையைப் பொதுப்பணித் துறைக்கு அளித்து, அத்துறை மூலம் வைப்புத் தொகைப் பணியாக மறைமலையடிகளார் நினைவு இல்லத்தைப் பழுதுபார்த்து, சீரமைத்து தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்திடம் ஒப்படைத்திடவும், மேற்படி பழுதுபார்ப்புப் பணிகளைக் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கண்காணிப்பில் நிறைவேற்றிடவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9